**BRAMPTON**

**Media Release**

உடனடி வெளியீட்டுக்காக

**கோவிட் -19 (COVID-19) வைரஸ் தொற்றினைக் கட்டுப்படுத்துவதற்காக, ப்ராம்ப்ட்டன் நகர பார்கள், சிற்றுண்டியகங்கள் மற்றும் உணவு நிறுவனங்கள் முதலானவை, நேரடியாக உணவு பரிமாறும் சேவைகளை நிறுத்துமாறு ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகம் அறிவிப்பு செய்திருக்கிறது**

ப்ராம்ப்ட்டன், ON (மார்ச் 16, 2020) – கோவிட் -19 (COVID-19) வைரஸ் தொற்றினைக் கட்டுப்படுத்துவதற்காக, ப்ராம்ப்ட்டன் நகர பார்கள், சிற்றுண்டியகங்கள் மற்றும் உணவு நிறுவனங்கள் முதலானவை தங்கள் இடத்தில் வைத்தே நேரடியாக உணவு பரிமாறும் சேவைகளை நிறுத்துமாறு ஒன்ட்டேரியோ பிராந்தியம் அறிவுறுத்தியிருக்கிறது; இந்த அறிவிப்பினைப் பின்பற்றுவதன் மூலம் ப்ராம்ப்ட்டன் மாநகரமானது பீல் பப்ளிக் ஹெல்த் (Peel Public Health)-க்கு தனது ஆதரவைத்தருகிறது.

கூடவே, மார்ச் 12, 2020 தேதியில் நள்ளிரவு12.01 மணி முதல் இரவுநேர கிளப்கள், திரையரங்குகள் மற்றும் இன்னிசைக் கச்சேரி நிகழ்த்துமிடங்கள் ஆகியவற்றை மூடுமாறு பீல் பப்ளிக் ஹெல்த் (Peel Public Health) கண்டிப்புடன் பரிந்துரைக்கிறது. சமூகத்தினர் ஒருவருக்கொருவர் விலகியே இருப்பதற்கான முயற்சிகளை எடுக்குமாறு பீல் பப்ளிக் ஹெல்த் (Peel Public Health) வலியுறுத்துகிறது. சமூகத்தினர் ஒருவருக்கொருவர் விலகி இருப்பது என்பதற்கு, சமூகத்தில் இருக்கும் ஒவ்வொருவரும் மற்றவரை உடல்ரீதியாக தொடுவதைத் தவிர்ப்பது மற்றும் மற்றவரிடமிருந்து சற்று தள்ளியே (சுமாராக 2 மீட்டர் தூரம்) இருந்து பழகுவது என்று அர்த்தமாகும்.

கனடா நாட்டுக்கு வெளியே, அமெரிக்க ஐக்கிய நாடுகள் உள்ளிட்ட வேறு நாடுகளுக்கு பயணம் செய்த உள்நாட்டு குடியிருப்பு வாசிகள் தமக்குத்தாமே 14 நாட்களுக்கு தனிமைப்படுத்திக்கொள்ளுமாறு கண்டிப்புடன் பரிந்துரைக்கப்படுகிறது.

பீல் (Peel ) குடியிருப்புவாசிகளைக் காக்கும் நோக்கில், பொது மக்கள் நலனைக் கருத்தில் கொண்ட பல சிற்றுண்டியகங்கள், மதுபார்கள் மற்றும் உணவு நிறுவனங்கள், ஏற்கெனவே தங்கள் தொழில் செய்யும் விதத்தை தன்னார்வத்துடன் மாற்றிக்கொண்டுள்ளனர்; ஆனால் பிராந்தியத்தின் அல்லது பீல் பப்ளிக் ஹெல்த் (Peel Public Health) இன் பரிந்துரைகளை மீறுகின்றவர்கள் சுகாதாரப் பாதுகாப்பு மற்றும் மேம்படுத்தல் சட்டத்தின் கீழான நடவடிக்கைகளுக்கு ஆளாவார்கள்

குடியிருப்பு வாசிகள் தங்களுக்கு தேவையான உணவுகளை உள்ளூர் உணவு சேவை அளிப்பவர்களின் இடத்தில் இருந்து வாங்கி, வெளியில் எடுத்துச் சென்றுவிடுமாறு அல்லது கொண்டு வந்து சேர்ப்பிக்கும் சேவைகளுக்கு ஆதரவளிக்குமாறு ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகம் கேட்டுக்கொள்கிறது.

The Corporation of The City of Brampton
2 Wellington Street West, Brampton, ON L6Y 4R2 311 TTY: 905.874.2130

மிக சமீபத்திய புதுத் தகவல்களுக்கு மற்றும் நகரில் கிடைக்கும் சேவைகள் பற்றி அடிக்கடி கேட்கப்படும் கேள்விகளுக்கு (FAQs) , வசதியமைப்புக்கள் மற்றும் நிகழ்ச்சிகள் நடத்தும் இடங்களை மூடுதல் பற்றி அறிய வருகை புரியவும்: www.brampton.ca/covid19.

பீல் பப்ளிக் ஹெல்த் (Peel Public Health) லிருந்து கிடைக்கும் தற்போதைய தகவல்களுக்கு வருகை புரியவும்: www.peelregion.ca/coronavirus.

**அறிஞர் கூற்று**

" சமுதாயத்தின் ஊடாக கோவிட் -19 (COVID-19) வைரஸ் தொற்று பரவுவதை முன்னதாக தடுப்பதில் உதவுவதற்கு, விரைவான கூட்டு செயல்பாடு தேவைப்படுகிறது. ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகம் பீல் பப்ளிக் ஹெல்த் (Peel Public Health) இன் பரிந்துரைக்கு முழு ஆதரவளிக்கிறது; சிற்றுண்டியகங்கள் மது பார்கள் மற்றும் காப்பி கடைகள் உள்ளிட்ட அனைத்து உள்ளூர் உணவு நிறுவனங்களிலும், உள்ளிருந்தபடி சாப்பிட்டுச் செல்லும் சேவைகள் வழங்குவதை தற்காலிகமாக நிறுத்துவதன் மூலம் சமுதாயப் பாதுகாப்புக்கு முன்னுரிமை கொடுக்கிறது. கோவிட் – 19 (COVID-19) தொற்றுக்கு எதிர்ச்செயலாக எடுக்கப்படும் முன்னெப்போதுமில்லாத நடவடிக்கையின் தாக்கத்தைக் குறைக்க ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகம் கடமை கொண்டுள்ளது. இதுவரை இல்லாத வகையில் நாம் ஒத்துழைப்புடன் இருப்பது இப்போது மிகவும் முக்கியமாகும் என்பதுடன், வரவிருக்கும் வாரங்களைக் கடந்து செல்வதில் பொது மக்களாகிய உங்களின் தொடர்ந்த ஆதரவை நாங்கள் நாடுகிறோம்."

- பேட்ரிக் ப்ரவுன், மேயர், ப்ராம்ட்டன் மாநகரம்

**கனடா நாட்டில் மிக விரைவாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றான ப்ராம்ப்ட்டன் தன் வசத்தில் 650,000 மக்களையும் 70,000 வணிக அமைப்புக்களையும் கொண்டிருக்கிறது.** நாங்கள் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் பொதுமக்களை மனத்தில் வைத்தே செய்கின்றோம். பலதரப்பட்ட சமுதாயத்தினர் எங்களுக்கு வலு சேர்க்கின்றனர், முதலீட்டை நாங்கள் ஈர்க்கிறோம், தொழில்நுட்பரீதியில் மற்றும், சுற்றுச்சூழல்ரீதியிலான புதுமைப் படைத்தலில் முன்னணி வகிப்பதற்கான பயணத்தில் நாங்கள் சென்றுகொண்டிருக்கிறோம். பாதுகாப்பான, நிலைத்து நிற்கவல்ல மற்றும் வெற்றிகரமான ஆரோக்கியமிக்க ஒரு நகரைக் கட்டமைப்பதற்கான வளர்ச்சிப்பாதையில் நாங்கள் பங்கு வகிக்கிறோம். *Twitter*, *Facebook*, மற்றும் *Instagram* ஆகியவற்றில் எங்களுடன் இணையுங்கள். *www.brampton.ca* இல் இன்னும் தெரிந்துகொள்ளுங்கள்.

**ஊடக தொடர்பு**
மோனிக்கா துக்கல்
ஒருங்கிணைப்பாளர், ஊடகம் & சமுதாய ஈடுபாடு
யுக்திரீதியான தகவல் தொடர்பு
ப்ராம்ப்ட்டன் நகரம்
905-874-3426 | Monika.Duggal@brampton.ca